©
GOVERNMENT OF TAMIL NADU
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 4.80 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 120A]

சென்னை, திங்கட்கிழமை, மே 13, 2013
சித்திரை 30, விஜய, திருவள்ளுவர் ஆண்டு - 2044

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

*பக்கங்கள்*

**சட்டமுன்வடிவுகள் :**

எண் 12/2013—தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நலநிதியத் (திருத்த) திருத்தச் சட்டம் .. .. .. .. .. .. .. 2–3

எண் 13/2013—தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (திருத்தச்) சட்டம் .. .. 5–6

எண் 14/2013—தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் செய்தல் (திருத்தச்) சட்டம் .. 7–10

எண் 15/2013—இந்தியக் கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் .. 11–12

2013–ஆம் ஆண்டு மே திங்கள் 13–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது**.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2013.**

***2013–ஆம் ஆண்டு வழக்குரைஞர்கள் நலநிதியத் (திருத்தச்) சட்டத்தினை திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக்குடியரசின் அறுபத்து நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2013–ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நலநிதியத் (திருத்த) திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2013–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 25–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்து விட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

1 –ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 2/2013.

**2.** 2013–ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நலநிதிய (திருத்தச்) சட்டத்தின் (1) ஆம் பிரிவில் (2) ஆம் உட்பிரிவிற்காக பின்வரும் உட்பிரிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:–

(2) 2012–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8–ஆம் நாளன்று பிரிவு 3 நடைமுறைக்கு வந்து விட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் 2 மற்றும் 4–ஆம் பிரிவுகள் மாநில அரசால் அறிவிக்கையின் வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும். மற்றும் 2 மற்றும் 4–ஆம் பிரிவுகளுக்காக வேறுபட்ட தேதிகள் குறித்திடப்படலாம்.

## நோக்க காரண விளக்கவுரை

1987–ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதியச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 49/ 1987) தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நலநிதியச் சட்டத்தின் உறுப்பினதாரரொருவர் இறந்து போவதன் அடிப்படையில் பெயர் குறிப்பிடப்பட்டவர் அல்லது சட்டபூர்வ வாரிசுதாரருக்கு செலுத்தத்தக்க நிதி உதவியை இரண்டு லட்சம் ரூபாயிலிருந்து ஐந்து லட்சம் மற்றும் இருபத்தைந்தாயிரம் ரூபாயாக அதிகரிப்பதற்காக 2013–ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நலநிதியத் (திருத்தச்) சட்டத்தினால் (தமிழ்நாடு சட்டம் 2/2013) திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக மேலும் ஏற்படக்கூடிய செலவினை சரிசெய்யும் பொருட்டு வழக்குரைஞர்கள் நலநிதிய முத்திரை மதிப்பு, உறுப்பினர் சேர்க்கை அனுமதிக் கட்டணம், ஆண்டு பங்களிப்பு மற்றும் வாழ்நாள் முழுவதற்குமான பங்களிப்பு மேலும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது மற்றும் தொடர்புடைய பிரிவுகள் மேலும் திருத்தம் செய்யப்பட்டிருக்கின்றன. அரசு 08–09–2012–லிருந்து செல்திறத்துடன் 2/2013 தமிழ்நாடு சட்டத்தின் 3–ஆம் பிரிவிற்கு செல்திறம் அளிக்க முடிவு செய்திருக்கிறது மற்றும் மேற்சொன்ன சட்டத்தின் 2 மற்றும் 4–ஆம் பிரிவுகளுக்கு மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாக குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று செல்திறம் அளிப்பதற்கு முடிவு செய்துள்ளது.

**2.** இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.பி. முனுசாமி,**
*நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம்,*
*நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

2013–ஆம் ஆண்டு மே திங்கள் 13–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2013.**

***2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபத்து நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக.–

குறுந்தலைப்பும் தொடக்கமும்

**1.** (1) இந்தச் சட்டம் 2013–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி ( திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 32/2006.

நான்காம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

**2.** 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்திற்கான நான்காம் இணைப்புப் பட்டியலில் பகுதி B–யில் 2–ஆம் எண் வரிசையிலுள்ள பதிவுக்கு மாற்றாக பின்வரும் பதிவானது அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:–

"அரசால் அறிவித்துள்ளவாறு மாற்றுத் திறனாளிகளுக்கான உதவிகள் மற்றும் துணைக்கருவிகள்'.

**நோக்கக் காரண விளக்கவுரை**

நபர்களை அவர்களின் ஊனத்தின் அடிப்படையில் அதாவது உடல் ஊனமுற்றோர், கண்பார்வையற்றோர், காது கேளாதோர் என குறிப்பிடக்கூடிய சமுதாய இழுக்கினை அகற்றிடும் நோக்கில், மேற்கண்ட நபர்களிடத்திலுள்ள தனிப்பட்ட மற்றும் அசாதாரண திறமைகளினால் அவர்களை "மாற்றுத் திறனாளிகள்" என அழைக்க வேண்டும் என்று அரசு அறிவித்திருந்தது. அதற்கிணங்க, 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) நான்காம் இணைப்புப் பட்டியலில் இடம் பெற்றுள்ள "உடல் ஊனமுற்றோர்" என்கின்ற சொற்றொடருக்கு பதிலாக "மாற்றுத் திறனாளிகள் என்ற சொற்றொடரைப் பயன்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

2. இச்சட்ட முன்வடிவு, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் அளிக்க விழைகிறது.

**பி வி ரமணா**
*வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

2013–ஆம் ஆண்டு மே திங்கள் 13–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2013.**

***1975ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் செய்தல் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இது இந்தியக் குடியரசின் அறுபத்து நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தின் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமாக இயற்றப்பட்டது:—

1. (1) இந்தச் சட்டம் 2013ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது மாநில அரசால் அறிவிக்கையினால் குறித்தடலாகும் அத்தகைய தேதியன்று செயலாற்றலுக்கு வரும்.

தமிழ்நாடு சட்டம் 27/1975.

49 –ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1975ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தில்,

(i) 49ஆம் பிரிவில் ஓரத்தலைப்பிற்காக பின்வரும் ஓரத் தலைப்பு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும் அதாவது:—

"குறித்த சில நேர்வுகளில் தாமதத்தை மன்னித்தல்."

(ii) 49ஆம் பிரிவு, அவ்வாறு திருத்தப்பட்டவாறு அதனின் (1)ஆம் உட்பிரிவாக மறு எண்ணாக ஆக்கப்படுதல் வேண்டும். மற்றும் அவ்வாறு மறு எண்ணாக ஆக்கப்பட்டுள்ள (1) ஆம் உட்பிரிவிற்குப் பின்பு பின்வரும் உட்பிரிவு சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(2) அரசு அல்லது பதிவாளர், சங்கம் எதனாலும் எழுத்துப்பூர்வமாக விண்ணப்பிக்கப்பட்டுள்ள ஒரு விண்ணப்பத்தின் பேரில் அல்லது நேர்வுக்கேற்ப 4ஆம் பிரிவில் (1)ஆம் உட்பிரிவு அல்லது (2)ஆம் உட்பிரிவின், 13ஆம் பிரிவின் (1)ஆம் கூறு, 15ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவு, 16ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவு 27ஆம் பிரிவின்படி வகுத்துரைக்கப்பட்ட காலவரைக்கு இணங்க தாமதத்தை மன்னிப்பதற்கு பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் அல்லது (1)ஆம் உட்பிரிவின்படி அனுமதிக்கப்பட்டுள்ள மேலுமான காலவரையறை அத்தகைய காலத்திற்காக மற்றும் வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய தண்டம் செலுத்தப்பட்டதன் அடிப்படையில் தாமதத்தை மன்னிக்கலாம்.".

**நோக்கக் காரண விளக்கவுரை**

1975ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் தமிழ்நாடு மாநிலத்தில் இலக்கியம், அறிவியல், சமயம், அறக்கட்டளை மற்றும் பிற சங்கங்களை பதிவு செய்வதற்கு வழிவகை செய்கிறது. மேற்சொன்ன சட்டம் குறித்த சில சங்கங்களின் பதிவினையும் மற்றும் பதிவு செய்துள்ள சங்கங்கள், 1978ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் விதிகளின்படி வகுத்தலைக்கப்பட்டுள்ள காலவரைக்குள் காலமுறைப்படி மாவட்ட பதிவாளரிடம் அவர்களுடைய வருடாந்திர விவர அறிக்கையை தாக்கல் செய்தல் வேண்டும்.

2. 2012ஆம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் நாளன்று இருந்தவாறு மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட சங்கங்கள், 2, 36, 124 ஆக இருக்கின்றன. பெரும்பாலான சங்கங்கள் சமுதாய குறிக்கோளுக்காக அமைக்கப்பட்டிருக்கின்றன, மற்றும் தொழிலாக செய்வோர்களால் மேலாண்மை செய்யப்படவில்லை. எனவே, வழக்கமாக பல சங்கங்கள் காலமுறைப்படி மாவட்டப் பதிவாளரிடம் அவர்களுடைய விவர அறிக்கையை தாக்கல் செய்வதற்காக கால வரையறையை கவனத்தில் கொள்ளமால் இருக்கின்றன. சங்கங்கள் ஆவணங்களை தாமதமாக தாக்கல் செய்வதினால் விதிகளை மீறுகின்றன என்பதை அவை உணருவதில்லை. வகுத்துரைக்கப்பட்ட காலவரையறைக்குள் பதிவாளரிடம் விண்ணப்பித்திருக்கின்றவிடத்து மேற்சொன்ன சட்டத்தின் 49ஆம் பிரிவு மூன்று மாதங்களுக்கு மிகாத மேலுமான காலவரையறையை அனுமதிப்பதற்கு பதிவாளருக்கு அதிகாரமளிக்கிறது. பிற நேர்வுகளில் சங்கமானது தாமதத்தை மன்னிப்பதற்காக விண்ணப்பித்திருக்கின்றவிடத்து மேற்சொன்ன சட்டத்தின் 54ஆம் பிரிவில் வகைமுறையாக இப்பொழுது செய்யப்பட்டுள்ளது. அது, சங்கம் அல்லது பதிவு செய்யப்பட்ட சங்கம் எதனையும் அந்தச் சட்டத்தின் அனைத்து அல்லது வரைமுறைகள் எதிலிருந்தும் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதி எதிலிருந்தும் விலக்களிப்பதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கிறது. வருடா வருடம் ஆவணங்களை தாமதமாக தாக்கல் செய்வதென்பது அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றன. சங்கங்களினால் ஆவணங்களை தாமதமாக தாக்கல் செய்வதைத் தடுக்கும் வகையில் கடும் நடவடிக்கையொன்றாக, அதற்காக தண்டம் விதிப்பதற்கும் மேலும், பதிவுத்துறைத் தலைவர் மற்றும் மாவட்டப் பதிவாளருக்கு தண்டத்தை விதிப்பதற்கு மற்றும் தாமதத்தை மன்னிப்பதற்கும் அதிகாரமளிக்க கருதப்பட்டது.

3. எனவே அரசு, 1975ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 27/1975) மேற்சொன்ன கருத்திற்கு பொருந்தத்தக்க வகையில் திருத்துவதற்காக முடிவு செய்யபட்டுள்ளது.

4. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்திறம் அளிக்க விழைகிறது.

**பி வி ரமணா,**
*வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு குறித்த குறிப்புரை**

1975ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/ 1975)இன் 49ஆம் பிரிவில் புதிய (2)ஆம் உட்பிரிவு புகுத்தப்பட உள்ளது. இந்த சட்டமுன்வடிவின் (2)ஆம் கூறு அதில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக விதிகளை செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கிறது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயின்றி சிறப்புத் தன்மை வாய்ந்தவையல்ல.

**பி வி ரமணா,**
*வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

2013–ஆம் ஆண்டு மே திங்கள் 13–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2013.**

**1932ஆம் ஆண்டு இந்தியக் கூட்டாண்மைச் சட்டத்தை திருத்துவதற்கான சட்டமுன்வடிவு தமிழ்நாடு மாநிலத்தில் அதனுடைய பொருந்தகை.**

இது, இந்தியக் குடியரசின் அறுபத்து நான்காம் ஆண்டில் மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு இயற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம் 2013ஆம் ஆண்டு இந்தியக் கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந் தலைப்பும் அளவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் அளாவி நிற்கும்.

(3) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

மையச் சட்டம் IX/1932.

2. 1932ஆம் ஆண்டு இந்தியக் கூட்டாண்மைச் சட்டத்திற்குரிய முதலாம் இணைப்பு பட்டியலுக்காக பின்வரும் இணைப்பு பட்டியல் மாற்றீடு செய்யப்படுதல் வேண்டும் அதாவது:– IX/1932 மையச் சட்டத்தின் முதலாம் இணைப்பு பட்டியலுக்கான புதிய இணைப்பு பட்டியல் மாற்றாக அமைக்கப்படுதல்.

**இணைப்புப் பட்டியல்–I**

**பெரும அளவிலான கட்டணம்**

[71ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவினைக் காண்க]

| | ஆவணம் அல்லது பணி தொடர்பாக செலுத்தத்தக்க கட்டணம்<br>(1) | | பெரு அளவிலான கட்டணம்<br>(2) |
|---|---|---|---|
| 1. | 58ஆம் பிரிவின்படி விவரவுரை | .. | இருநூறு ரூபாய் |
| 2. | 60ஆம் பிரிவின்படி விவரவுரை | .. | ஐம்பது ரூபாய் |
| 3. | 61ஆம் பிரிவின்படி தகவலுக்கு | .. | ஐம்பது ரூபாய் |
| 4. | 62ஆம் பிரிவின்படி தகவலுக்கு | .. | ஐம்பது ரூபாய் |
| 5. | 63ஆம் பிரிவின்படி அறிவிப்புக்கு | .. | ஐம்பது ரூபாய் |
| 6. | 64ஆம் பிரிவின்படி விண்ணப்பம் | .. | ஐம்பது ரூபாய் |
| 7. | 66ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்படி நிறுவனங்களின் பதிவாளரின் ஆய்வு | .. | பதிவேட்டில் ஒவ்வொரு நிறுவனத்தில் பதிவின் ஆய்விற்காக இருபத்தைந்து ரூபாய். |
| 8. | 66ஆம் பிரிவின்(20 உட்பிரிவின்படி நிறுவனம் ஒன்று தொடர்பான ஆவணங்களின் ஆய்வு | .. | ஒரு நிறுவனம் தொடர்பான அனைத்து ஆவணங்களின் ஒவ்வொன்றிற்கும் ஐம்பது ரூபாய். |
| 9. | நிறுவனங்களின் பதிவாளரிடமிருந்து பெறும் நகல்களுக்கு | .. | நூறு வார்த்தைகள் அடங்கியுள்ள ஒவ்வொன்றிற்கும் அல்லது அதனின் பகுதிக்கு பத்து ரூபாய்.”. |

**நோக்கக் காரண விளக்கவுரை**

1932ஆம் ஆண்டு இந்தியக் கூட்டாண்மைச் சட்டத்தின் 71ம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு (மையச் சட்டம் IX/1932) கூறப்பட்ட சட்டத்திற்குரிய முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெரும அளவிலான கட்டணங்களுக்கு மிகாத கட்டணங்களை வகுத்துரைக்கும் விதிகளைச் செய்வதற்கு மாநில அரசுக்கு அதிகாரமளிக்கிறது. 1982ஆம் ஆண்டு இந்திய கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்தம்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டுள்ளவாறான (தமிழ்நாடு சட்டம் 38/1982) பெரும அளவு விகிதத்தில் தற்பொழுது விதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. முப்பது வருடங்கள் நிறைவடைந்தும் தற்பொழுதுதான் இறுதியாக கட்டணங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. ஆகையால் கூறப்பட்ட சட்டத்தின்படி பதிவுத்துறையால் அளிக்கப்படும் பணிகளுக்கு தக்கவாறு கட்டணங்களை விதிக்கும் பொருட்டு மேற்கூறப்பட்ட சட்டத்தின் முதலாம் இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பெரும அளவு கட்டணங்களை அதிகரிப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

2. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவுற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**பி வி ரமணா,**
*வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.